## நேஷன்ஸ் வெளிநாட்டு நாணய முதலீட்டு திட்டக் கணக்கு நியதிகளும் நிபந்தனைகளும்

- நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி இல் - PQ118 ("வங்கி"), திறந்து பேணப்படுகின்ற ஒவ்வொரு நேஷன்ஸ் வெளிநாட்டு நாணய முதலீட்டு திட்டக் கணக்கினையும் ('FCY திட்டக் கணக்கு') பின்வரும் நியதிகளும், நிபந்தனைகளும் ஆளும்.

### கணக்கை ஆரம்பித்தல்

1. நேஷன்ஸ் வெளிநாட்டு நாணய முதலீட்டு திட்டக் கணக்கானது பதினெட்டு (18) வயதுக்கு மேற்பட்ட எவரேனும் நபரினால் திறக்கப்படலாம், ஆயினும் அத்தகைய நபர், வங்கியினால் மேற்கொள்ளப்படும் நியம அடையாள சரிபார்த்தல் செயன்முறையினூடாக சாதகமான அடையாளப்படுத்தல் மீதும் அத்துடன் வங்கியின் கணக்கு திறத்தல் ஆவணத்தை பூர்த்தி செய்தலின் மீதும், ('வாடிக்கையாளர்') கணக்கை ஆரம்பிக்கின்ற நேரத்தில் நிலவுகின்ற FCY திட்டக் கணக்குகளுக்கான தகைமைப் பிரமாணத்தினையும் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

2. ஒவ்வொரு FCY திட்டக் கணக்கிற்கும் ஒரு இலக்கம் வழங்கப்படுதல் வேண்டும், அது வங்கியுடனான அனைத்து தொடர்பாடலிலும் அத்துடன், அனைத்து வைப்புச் சீட்டுக்கள் மீதும் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு தரப்பட்ட இலக்கத்தினை வாடிக்கையாளருக்கான அறிவித்தலுடன் மாற்றுவதற்கான உரிமையினை வங்கி கொண்டிருக்கும்.

3. இணைந்த FCY திட்டக் கணக்குகள் திறக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

4. FCY திட்டக் கணக்கொன்றினைத் திறப்பதற்கு தகைமையடைய ஒவ்வொரு வாடிக்கையாளரும், 10 ஆம் வாசகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்திற்காக, ஐக்கிய அமெரிக்க டொலர்களில் (ஐ. அ. டொலர்) வங்கியில் நேரொத்த தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினை (PFCA) அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினை (BFCA) திறத்தலும் வேண்டும். மாதாந்த தவணைக்கொடுப்பனவு, ஐ. அ. டொலரில் மாத்திரம் கொடுப்பனவுசெய்யப்பட வேண்டும்.

5. இந்நியதிகளை மற்றும் நிபந்தனைகளை அனுசரித்து திறக்கப்படும் அனைத்து வெளிநாட்டு நாணயக் கணக்குகளும் ("FYC கணக்குகள்"), அத்தகைய வெளிநாட்டு நாணயக் கணக்குகளை ஆளுகின்ற ஏற்புடைய சட்டங்களின் கீழான விதிகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### முதிர்ச்சி இலக்குத் தொகையும் முதிர்ச்சித் திகதியும்

6. 16 ஆம் வாசகத்திற்கு உட்பட்டு, வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஐ. அ. டொலர் பத்தாயிரம் (ஐஅடொ 10,000) கொண்ட குறைந்தபட்ச முதிர்ச்சி இலக்குப் பெறுமதியுடனும் ஐ. அ. டொலர் ஐம்பதாயிரம் (ஐ. அ. டொலர் 50,000) பெறுமதி கொண்ட உயர்ந்தபட்ச முதிர்ச்சி இலக்குப் பெறுமதியுடனும் திறக்கப்படலாம்.

   "முதிர்ச்சி இலக்குப் பெறுமதி" என்பது வங்கியின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் ('முதலீட்டுத் திட்டம்') கீழ் முதிர்ச்சித் திகதியன்று பெற்றுக்கொள்வதற்கு வங்கியுடன் வாடிக்கையாளர் ஒப்பந்தம்செய்கின்ற தொகை எனப் பொருள்படும்.

   'முதிர்ச்சித் திகதி' என்பது வங்கியின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் ('முதலீட்டுத் திட்டம்') கீழ் முதிர்ச்சி இலக்குப் பெறுமதியினை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்கின்ற திகதியாகும் எனப் பொருள்படும்.

7. வாடிக்கையாளர், மூன்று (03) வருடங்களைக் கொண்ட குறைந்தபட்ச காலப்பகுதியில் அத்துடன், ஐந்து (05) வருடங்களைக் கொண்ட உயர்ந்தபட்ச காலப்பகுதியில் அல்லது காலத்திற்குக் காலம் வங்கி குறித்துரைத்து அனுமதிக்கின்றவாறான அத்தகைய வேறு காலப்பகுதியில் முதிர்ச்சி இலக்குப் பெறுமதியினை அடைந்து கொள்வதனை தெரிவுசெய்யலாம்.

8. வெளிநாட்டு நாணய முதலீட்டு திட்டக் கணக்கினைத் திறக்கின்ற நேரத்தில், வெளிநாட்டு நாணய முதலீட்டு திட்டக் கணக்கினை ஆரம்பிக்கின்ற படிவத்தில் முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதிர்ச்சி இலக்குப் பெறுமதியினையும், முதிர்ச்சி இலக்குப் பெறுமதியினை பெற்றுக்கொள்வதற்கு அவர் விரும்புகின்ற முதிர்ச்சி இலக்கு திகதியினையும் குறித்துக்காட்டுவதன் மூலம் வாடிக்கையாளர் அவற்றைத் தெரிவுசெய்ய வேண்டும். வெளிநாட்டு நாணய முதலீட்டு திட்டக் கணக்கை ஆரம்பிக்கின்ற நேரத்தில், வங்கியின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வாடிக்கையாளரினால் தெரிவுசெய்யப்பட்ட முதிர்ச்சித் திகதியன்று முதிர்ச்சி இலக்குப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடையவராக இருக்கும் பொருட்டு, வங்கியானது வெளிநாட்டு நாணய முதலீட்டு திட்டக் கணக்கிற்கு வாடிக்கையாளர் வைப்பிலிடுவதற்கு தேவையான மாதாந்த தவணைக்கொடுப்பனவினையும் சொல்லப்பட்ட மாதாந்த தவணைக்கொடுப்பனவை செலுத்தவேண்டிய திகதியினையும் கணித்து ஆலோசனை வழங்கும்.

<u>தவணைக்கொடுப்பனவுகள்</u>

9. மாதாந்த தவணைக்கொடுப்பனவானது முதிர்ச்சி இலக்குப் பெறுமதி, முதலீட்டுக் காலம் மற்றும் ஒப்பந்தம்செய்யப்பட்ட வட்டி வீதம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு வங்கியினால் கணிக்கப்படும் (“மாதாந்த தவணைக்கொடுப்பனவு”).

10. 35 தொடக்கம் 44 வரையான வாசகங்களுக்குட்பட்டு, வாடிக்கையாளர், மாதாந்த அடிப்படையில் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கிற்கு நிதியளிக்கும் பொருட்டு, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு மீது நிலையியல் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு பொறுப்பேற்கின்றார். வாடிக்கையாளரினால் தெரிவுசெய்யப்பட்ட முதிர்ச்சி இலக்குப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடையவராக இருக்கும் பொருட்டு, மாதாந்த தவணைக்கொடுப்பனவானது முதிர்ச்சித் திகதி வரையிலும் ஒவ்வொரு மாதமும் செலுத்தவேண்டிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாக கிடைக்கப்பெறச் செய்யப்படுதல் வேண்டும். வங்கியினால் குறித்துரைக்கப்பட்டவாறு ஒவ்வொரு மாதத்தினதும் செலுத்தவேண்டிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மாதாந்த தவணைக்கொடுப்பனவினை முழுமையாக கிடைக்கப்பெறச் செய்வதற்கு வாடிக்கையாளர் தவறுகின்ற சந்தர்ப்பத்தில், முதிர்ச்சித் திகதியன்று முதிர்ச்சி இலக்குப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர் தகைமை இழந்தவராக இருப்பார்.

11. இந்நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி, மாதாந்த தவணைக்கொடுப்பனவு உரிய நேரத்தில் கிடைக்கப்பெறச் செய்யப்பட்டுள்ளது என்பதனை உறுதிசெய்வது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். மாதாந்த தவணைக்கொடுப்பனவு செலுத்தப்படவேண்டியதாக வருகின்ற அல்லது தாமதமடைகின்ற போது, வாடிக்கையாளருக்கு அறிவிப்பதற்கு வங்கி பொறுப்புடையதாக அல்லது கடப்பாடுடையதாகவிராது.

<u>முதிர்ச்சி மீதான வட்டி மற்றும் கொடுப்பனவு</u>

12. வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கிலுள்ள நாளாந்த மீதியின் மீது வெளிநாட்டு நாணய முதலீட்டுக் திட்டக் கணக்கை ஆரம்பிக்கின்ற நேரத்தில் வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வீதங்களில் வட்டி கணிக்கப்பட்டு, முதிர்ச்சித் திகதி வரை வெளிநாட்டு நாணய முதலீட்டு திட்டக் கணக்கிற்கு மாதாந்தம் வரவு வைக்கப்படல் வேண்டும். வங்கியானது வட்டி வட்டிவீதங்களை மாற்றுவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு சட்டத்தினால் வேண்டப்படுமெனில் அவ்வாறு செய்வதற்கு உரிமையினைக் கொண்டிருக்கும்.

13. வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் உரிமைக்காலப் பகுதியின் போது ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் கீழ் வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட மாதாந்த தவணைக்கொடுப்பனவுத் தொகைக்கு அதிகமாக அல்லது சொல்லப்பட்ட தவணைக்கொடுப்பனவின் பன்மடங்குகளை வாடிக்கையாளர் வைப்பிலிடுகின்ற சந்தர்ப்பத்தில், குறித்துரைக்கப்பட்ட மாதாந்த தவணைக்கொடுப்பின் மிகையான தொகை மீது அதன் ஏக அத்துடன் முழுமையான தற்றுணிபில் குறைவான வீதத்தில் வட்டியினைக் கணிப்பதற்கு அல்லது சொல்லப்பட்ட மிகையான தொகை மீதான வட்டிக் கொடுப்பனவின் மொத்தத்தினையும் பிடித்துவைப்பதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

14. 16ஆம் வாசகத்திற்கு உட்பட்டும் அத்துடன் நியதிகளுடனும் நிபந்தனைகளுடனும் வாடிக்கையாளர் இணங்கியொழுகுவதற்கு உட்பட்டும் வங்கி, முதிர்ச்சி இலக்குப் பெறுமதியினை வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

15. வாடிக்கையாளர்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வேண்டப்பட்டவாறு கணக்கு ஆரம்பிக்கின்ற படிவங்களில் அவர்களது வரி நிலைமைகள் மற்றும் வதிவிட நிலைமைகள் பற்றிய நியதிச் சட்ட பிரகடனத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

16. வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் மீதான (அதற்கான வட்டிக் கொடுப்பனவு மீதானவை உள்ளடங்கலாக) செலுத்தத்தக்க வரிகளை (பிடித்துவைத்தல் வரி மற்றும் ஏனைய நியதிச்சட்ட அறவீடுகள் உள்ளடங்கலாக) ("வரிகள்") கழிப்பதற்கு வங்கி உரித்துடையதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது அத்தகைய நோக்கத்திற்காக சட்டத்தினால் பெயர்குறிக்கப்பட்ட வேறு அத்தகைய அதிகாரியினால் எடுத்துரைக்கப்பட்டவாறு வங்கியினால் கழிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அதிகாரியினால் பிறிதொரு சமயத்தில் கோரப்படும் பட்டச்சத்தில், வங்கியானது செலுத்தப்படாத வரிகளை வாடிக்கையாளருக்கான அறிவித்தலின்றி எந்நேரத்திலும் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிமையினைக் கொண்டுள்ளது.

17. வாடிக்கையாளர் மூலமான மீளெடுப்புகள் கீழே 21ஆம் வாசகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கிலிருந்து அனுமதிக்கப்படலாகாது.

<u>முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வாடிக்கையாளர் மரணித்தல்</u>

18. முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வாடிக்கையாளர் மரணிக்கின்ற சந்தர்ப்பத்தில், முதலீட்டுத் திட்டம் முடிவுறுத்தப்பட்டு இருத்தலாதல் வேண்டும் என்பதுடன், முதலீடுசெய்யப்பட்ட முதன்மைத் தொகைகள் அத்துடன் அதற்கான ஒன்றுசேர்ந்த வட்டி உள்ளடங்கலாக வாடிக்கையாளரின் மரணத் திகதியில் உள்ளவாறு வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கில் உள்ள மீதிகள், வாடிக்கையாளரினால் செலுத்தப்படத்தக்க வரிகள் ('இறுதித்தீர்ப்பனவுப் பெறுமதி') என்பன ஏற்புடைய சட்டத்திற்கமைவாக வங்கியினால் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

19. வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கினை ஆரம்பிக்கின்ற நேரத்தில் பின்னுரித்தாளர் படிவத்தினை பூர்த்திசெய்வதன் மூலம் அல்லது ஏற்புடைய சட்டம் மற்றும் வங்கியின் நியதிகள் நிபந்தனைகளுக்கு அமைவாக அதன் பின்னர் ஏதேனும் நேரத்தில், முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வாடிக்கையாளர் மரணமடையும் பட்சத்தில், இறுதித்தீர்ப்பனவுப் பெறுமதி கொடுப்பனவு செய்யக்கூடிய பயன்பெறுநர் ஒருவரை அல்லது பயன்பெறுநனர்களை வாடிக்கையாளர் பின்னுரித்துச் செய்யலாம்.

<u>கணக்கை முடிவுறுத்தல்</u>

20. உரிய திகதியன்று ஏதேனும் மூன்று (03) தவணைக்கொடுப்பனவுகளைக் கொடுப்பனவு செய்வதற்கு வாடிக்கையாளர் தவணைதவறுகின்ற சந்தர்ப்பத்தில், அதன்பின்னர் ஏதேனும்

நேரத்தில் முதலீட்டுத் திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு அத்துடன் வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு:-

வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கினை மூடி அத்தகைய முடிவுறுத்தல் நேரம் வரை ஒன்றுசேர்ந்த வட்டியுடன் சேர்த்து முதலிடப்பட்ட மொத்த தொகையினை, வாடிக்கையாளர் செலுத்தத்தக்க வரிகள் அத்துடன் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கினை மூடுகின்ற கட்டணங்கள் என்பவற்றைக் கழித்து வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு செய்வதற்கு,

**அல்லது**

வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கினை மூடி, அத்தகைய முடிவுறுத்தல் நேரம் வரை ஒன்றுசேர்ந்த வட்டியுடன் சேர்த்து முதலிடப்பட்ட மொத்தத் தொகை உள்ளடங்கலாக வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கிலுள்ள நிலுவையினை வாடிக்கையாளரினால் செலுத்தத்தக்க வரிகள் அத்துடன் கணக்கை மூடுகின்ற கட்டணங்களைக் கழித்து தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கை அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கை ஆளுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அவற்றின் மூலம் அதன் பின்னர் ஆளப்படும் வாடிக்கையாளரின் பெயரிலுள்ள தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மாற்றல் செய்வதற்கு,

வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

21. விதிவிலக்கான சூழ்நிலைகள் அத்துடன் வங்கியின் முழுமையான தற்றுணிபில் தவிர முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கை மூடுவதற்கு அத்துடன்/அல்லது அதில் உள்ள மீதிகளை மீளெடுப்பதற்கு வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டர். முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கை மூடுவதற்கு வாடிக்கையாளரை வங்கி அனுமதிக்கின்ற பட்சத்தில், வங்கியானது அதன் நியதிகள் நிபந்தனைகளுக்குட்பட்டு, முதலிடப்பட்ட ஒன்றுதிரன்ட முதன்மை தொகையுடன் சேர்த்து முடிவுறுத்துகின்ற நேரம் வரை ஒன்றுசேர்ந்த வட்டியுடன் வங்கியின் தற்றுணிவில் அனைத்து ஏற்புடைய தண்ட வட்டிகள் ஏதேனும் இருப்பின் அவை உள்ளடங்கலாக வாடிக்கையாளரினால் செலுத்தப்படத்தக்க வரிகள் மற்றும் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கினை மூடும் கட்டணங்கள் ஆகியவற்றைக் கழித்து வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

22. 20ஆம் மற்றும் 21ஆம் வாசகங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிலைமைகளின் கீழ் முதலீட்டுத் திட்டம் முடிவுறுத்தப்படுகின்ற அத்துடன்/அல்லது வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கு மூடப்படுகின்ற நிகழ்வில், வங்கியானது அத்தகைய மூடுகின்ற நேரத்தில் வங்கியின் ஏக தற்றுணிபில் தீர்மானிக்கப்படுகின்ற ஒப்பந்தம்செய்யப்பட்ட வட்டிவீதத்தினை விட குறைவான வீதத்தில் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கில் முதலிடப்பட்ட முதன்மைத் தொகை மீது வட்டியினைக் கொடுப்பனவுசெய்வதற்கு வங்கி உரித்துடையதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில், அனைத்து ஏற்புடைய தண்ட வட்டிகளும், ஏதேனும் இருப்பின், ஏற்புடையதாக இருத்தலும் வேண்டும்.

23. அதற்கான ஏதேனும் காரணத்தை குறித்தொதுக்காது வாடிக்கையாளரின் இறுதியாக அறியப்பட்ட தொடர்பு முகவரிக்கு இரண்டு (02) மாத அறிவித்தலை வழங்கியதன் பின்னர் அதன் முழுமையான தற்றுணிபில் எந்நேரத்திலும் முதலீட்டுத் திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு அத்துடன் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கினை மூடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

முதிர்வுத் திகதிக்கு முன்னர் முதலீட்டுத் திட்டத்தினை முடிவுறுத்துகின்ற நிகழ்வில், வங்கியின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, முதலீடுசெய்யப்பட்ட மொத்த முதன்மைத் தொகையினை அத்தகைய முடிவுறுத்தல் திகதி வரையிலான ஒன்றுசேர்ந்த வட்டியுடன் சேர்த்து

வாடிக்கையாளரினால் செலுத்தப்படக்கூடிய வரிகளைக் கழித்து வங்கி வாடிக்கையாளர்களுக்கு கொடுப்பனவுசெய்தல் வேண்டும்.

24. வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கினை ஆரம்பிக்கின்ற நேரத்தில் வாடிக்கையாளரினால் தெரிவுசெய்யப்பட்ட முதலீட்டு திட்டம் பற்றிய முதலீட்டு விபரங்களை நிர்ணயிக்கின்ற அறிவித்தலானது, வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கினை ஆரம்பிக்கின்ற நேரத்தில் வாடிக்கையாளரினால் தெரிவுசெய்யப்பட்ட தொடர்பு கொள்ளும் முறை வாயிலாக வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். வாடிக்கையாளருக்கு வைப்புப் புத்தகம் எதுவும் வழங்கப்படாது.

25. வங்கியானது வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கு பற்றி ஆண்டுக்கு இருமுறை வங்கிக் கூற்றுக்களை வாடிக்கையாளருக்கு வழங்குதல் வேண்டும். எவ்வாறாயினும், அதன் தற்றுணிபில் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் வங்கிக் கூற்றுகளின் கால இடைவெளியினை மாற்றுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

26. வங்கிக் கூற்று கிடைக்கப்பெற வேண்டிய திகதியில் இருந்து (அதாவது ஒவ்வொரு ஆண்டும் 30 ஜூன் மற்றும் 31 டிசெம்பர்) பதினைந்து (15) நாட்களுள் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் வங்கிக் கூற்று கிடைக்கப்பெறவில்லையாயின், வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும். பதிவுகளின் சரியானதன்மையினை உறுதிசெய்வதற்கு வங்கியிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் ஒவ்வொரு வங்கிக் கூற்றினையும் பரீட்சிப்பதற்கு வாடிக்கையாளர் இணங்குகின்றார். ஏதேனும் பிழைகள், வங்கிக் கூற்று கிடைக்கப் பெற்றதிலிருந்து (21) நாட்களுக்குள் வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

27. வாடிக்கையாளரின் வங்கிக் கூற்றுகளைப் பாதுகாப்பதற்கு அவர் பொறுப்புடையவராவார். வங்கிக் கூற்றுகளின் பிரதிகள் வங்கியிடமிருந்து கோரப்படுவதாயின், அதன் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக இச்சேவையினை வழங்குவதற்கான கட்டணத்தை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

28. வாடிக்கையாளரை தொடர்பு கொள்வதில் ஏதேனும் மாற்றம் பற்றி வங்கிக்கு உடனடியாக எழுத்தில் அறிவிக்கப்படல் வேண்டும்.

29. அதன் கடமைகளை அத்துடன்/அல்லது கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு அத்துடன்/அல்லது வங்கியின் சட்டபூர்வமான தொழில் நோக்கங்கள், அத்தகைய வெளிப்படுத்தல் கட்டாயமானதாக வேண்டப்படுகின்றவிடத்து, அத்தகைய வெளிப்படுத்தல்கள் அவசியமானதென வங்கி கருதுகின்றவாறும், கருதுகின்றபோதும் வங்கியுடனான வாடிக்கையாளரின் வெளிநாட்டு நாணய கணக்குகளுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளடங்கலாக வாடிக்கையாளருடன் தொடர்புடைய எவையேனும் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு வாடிக்கையாளர் வங்கிக்கு இத்தால் அங்கீகாரமளிக்கின்றார்.

30. இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு தவிர, வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் கீழ் எவையேனும் வாடிக்கையாளரின் உரிமைகளை அல்லது பொறுப்புக்களை வாடிக்கையாளர் குறித்தொதுக்குதலாகாது, கைமாற்றுதலாகாது அல்லது ஈடுவைத்தலாகாது என்பதுடன் வங்கியானது அத்தகைய கொடுக்கல்வாங்கல்களிலிருந்து நேரடியாக அல்லது நேரடியற்று தோன்றுகின்ற ஏதேனும் நட்டங்களினால் பிணிக்கப்பட்டிருக்காது அல்லது பொறுப்புடையதாகாவிராது.

31. இதில் குறிப்பிட்டவற்றுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், வாடிக்கையாளருக்கான அறிவித்தலின்றி, வாடிக்கையாளரின் ஏதேனும் வேறு கணக்குடன் அல்லது வங்கிக்கான வாடிக்கையாளரின் எவையேனும் பொறுப்புகளுடன் வாடிக்கையாளரின் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கினை வங்கி ஒன்றிணைக்கலாம் அல்லது ஒன்றுதிரட்டலாம் என்பதுடன்

அத்தகைய பொறுப்புகள், உண்மையாக அல்லது எதிர்பாராதவையாக, முதன்மையானவையாக அல்லது பிணையஉறுதியாக அத்துடன் பலதாக அல்லது இணைந்ததாக எதுவாகவிருப்பினும்சரி, ஏதேனும் வேறு கணக்கு மீது அல்லது வேறு ஏதேனும் தொடர்பில் வங்கிக்கு வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய தொகைக்கு/தொகைகளுக்கு எதிராக வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் வரவில் இருக்கின்ற ஏதேனும் தொகையினை/தொகைகளை எதிரீடு செய்யலாம் அல்லது மாற்றல் செய்யலாம்.

32. வங்கியின் ஏக அத்துடன் முழுமையான தற்றுணிபில், எந்நேரத்திலும் இந் நியதிகளையும் நிபந்தனைகளையும் மாற்றுவதற்கு, திருத்துவதற்கு அல்லது அவற்றுக்கு சேர்ப்பதற்கு வங்கி தானாக உரிமையினைக் கொண்டிருக்கும் என்பதுடன் அத்தகைய மாற்றங்கள், திருத்தங்கள் அல்லது சேர்த்தல் வாடிக்கையாளரை பிணிப்பதாக இருத்தலும் வேண்டும். அத்தகைய மாற்றங்கள், திருத்தங்கள் அத்துடன்/அல்லது சேர்த்தல்கள் பற்றிய அறிவித்தல்கள் அஞ்சல் மூலம் வாடிக்கையாளருக்கு அனுப்பப்படலாம் அத்துடன்/அல்லது உள்நாட்டு பத்திரிகைகளில் வெளியிடப்படலாம் அத்துடன்/அல்லது வங்கியின் கிளைகளில் உள்ள அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படலாம் அத்துடன்/அல்லது கூற்று செய்திகளினூடாக அனுப்பப்படலாம். அஞ்சல் மூலம் அனுப்பப்படுகின்ற இதன் கீழான ஏதேனும் அறிவித்தல் வாடிக்கையாளரின் இறுதியாக பதிவுசெய்த முகவரிக்கு அஞ்சல் செய்யப்பட்டு ஏழு (07) நாட்களினுள் வாடிக்கையாளருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக கொள்ளப்படுதல் வேண்டும். வாடிக்கையாளருக்கு அவ்வாறு வழங்கப்படும் அறிவித்தலானது போதுமான அத்துடன் முறையான அறிவித்தலாக கருதப்படுதலும் வாடிக்கையாளரை பிணிப்பதாக இருத்தலும் வேண்டும்.

    அத்தகைய திருத்தங்கள் சட்டத்தினால் அவசியப்படுத்தப்பட்டிருப்பின் இந்நியதிகளும் நிபந்தனைகளும், தன்னிச்சையாக திருத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

33. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் மேலதிகமாக, வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கானது கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வழங்கப்படும் வங்கியின் பொதுவான தொழில் நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்ட நியதிகளுக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவற்றினால் பிணைக்கப்படுதலும் வேண்டும். வாடிக்கையாளர் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பொதுவான நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதா அல்லது கூட்டிணைக்கப்படவில்லையா என்பதனை பொருட்படுத்தாது இதில் உள்ளடக்கப்பட்ட அனைத்து நியதிகளினாலும் நிபந்தனைகளினாலும் வாடிக்கையாளர் பிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

34. இந் நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கையின் சட்டங்களினால் ஆளப்படுதலும் வேண்டும்.

<u>நிலையியல் அறிவுறுத்தல்</u>

35. கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற திகதியன்று, முன்வைக்கப்பட்ட காசோலைகளுக்கு அல்லது வங்கியுடனான ஏதேனும் ஏற்கனவே காணப்படுகின்ற வேறு ஒழுங்குகளுக்கு எதிராக கொடுப்பனவுக் கட்டளையின் முன்னுரிமையினை நிர்ணயிப்பதற்கான உரிமையினைக் வங்கி கொண்டிருக்கும்.

36. தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் நிதியங்கள் போதாமையின் காரணமாக உரிய திகதியன்று மேற்கொள்ளப்படாத ஏதேனும் கொடுப்பனவிற்காக உரிய திகதிக்குப் பின்னர் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு வங்கி பொறுப்பேற்காது, அத்துடன் பின்னதாக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு நிதியங்கள் வைப்பிலிடப்படுமாயின், இந்நிலையியல் அறிவுறுத்தல் தொடர்பில் வங்கிக்கு குறிப்பாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

37. தொடர்ச்சியாக இரண்டு (02) மாதங்களுக்கு தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் நிதியங்கள் போதாமலிருப்பின், வங்கியானது வாடிக்கையாளருக்கு ஏதேனும் அறிவித்தல் வழங்காது நிலையியல் அறிவுறுத்தலினை இரத்துச் செய்யும்.

38. மரணம் அல்லது வங்குறோத்து/ தீர்த்துக்கட்டுதல் எவ்வாறிருப்பினும் அத்தகைய மரணம் அல்லது வங்குறோத்துநிலை, தீர்த்துக்கட்டுதல் அல்லது நிலையியல் அறிவித்தலை இரத்துச்செய்தல் பற்றிய அறிவித்தல் வங்கிக்கு கிடைக்கப்பெறும் வரையில் நிலையியல் அறிவுறுத்தல் செயற்பாட்டில் இருக்கும்.

39. நிலையியல் அறிவுறுத்தல்கள் தொடர்பிலான எவையேனும் திருத்தங்கள் அத்துடன் இரத்துச் செய்தல்கள் அடுத்த தொடர் கொடுப்பனவு செலுத்தவேண்டிய திகதிக்கு குறைந்தது ஒரு (01) வாரத்திற்கு முன்னர் வங்கிக்கு வந்துசேருதல் வேண்டும்.

40. வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு காலமுறையான கொடுப்பனவுக்காகவும் தரகுக் கட்டணமொன்று அறவீடு செய்யப்படலாம். இக்கட்டணமானது ஏற்புடையதாக இருக்கக் கூடிய தற்செயலான அஞ்சல் அத்துடன்/அல்லது முத்திரைத் தீர்வையினை உள்ளடக்காது.

41. வங்கியானது அதன் தற்றுணிபில் நிதியங்கள் போதாமைக்காக மேற்கொள்ளப்படாத ஒவ்வொரு நிலையியல் அறிவுறுத்தல் மீதும் கட்டணமொன்றை அறவிடலாம்.

42. இப் பணவனுப்புகைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பேற்றலில் அத்தகைய பணவனுப்புகைகளை மேற்கொள்வதில் தவறான, விடுபட்ட அல்லது தாமதம் ஊடாக ஒன்றுசேரக்கூடிய ஏதேனும் பின்விளைவான இழப்பு அல்லது சேதம் உள்ளடங்கலாக இழப்புக்கான அத்துடன் சேதத்திற்கான அனைத்து உரிமைக் கோரிக்கைகளிலிருந்தும் வங்கி விடுவிக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாக புரிந்துகொள்ளப்படுகின்றது.

43. வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்குகளின் கூற்றில் தகவல்கள் கிடைக்கப்பெறும் என்பதனால் நிலையியல் அறிவுறுத்தல்கள் இணங்குவிக்கப்பட்டுள்ளன என்ற வேறான அறிவித்தல் எதுவும் வாடிக்கையாளருக்கு அனுப்பப்படாது.

44. கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய நாள் ஞாயிற்றுக் கிழமையாக அல்லது வங்கி விடுமுறை நாளொன்றாக இருக்கின்ற நாளாகவிருப்பின், கொடுப்பனவானது அடுத்து வருகின்ற வேலைநாளன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இதன் கீழ் நான் விண்ணப்பித்துள்ள வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கிற்கு ஏற்புடைய வங்கியின் நியதிகளும் நிபந்தனைகளும் அத்தகைய வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்குடன் தொடர்புடைய விபரங்களுடன் சேர்த்து இங்கு கையொப்பமிடுவதற்கு முன்னர் எனக்கு வழங்கப்பட்டு விளக்கப்பட்டது என்றும், அதில் சொல்லப்பட்ட நியதிகளினதும், நிபந்தனைகளினதும் விபரங்களை நான் வாசித்துப் புரிந்துகொண்டேன் என்றும் அதன் மூலம் பிணைக்கப்படுவதற்கு இணங்கி சம்மதிக்கின்றேன் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் :

பெயர் :

திகதி :